## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.213/2013

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 14.12.2023. Evidence Recorded Time: 11.11 A.M to 11.25 A.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பிரகாஷ் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | பழனிசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**கூடுதல் முதல் விசாரணை:–**

நான் இதில் 2–ம் வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சி.3 ஆவேன். நான் மேல் கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கூடுதல் சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனவே எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:– இல்லை.**

**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஈ படித்துள்ளேன். ஏற்கனவே அம்மா தாக்கல் செய்த நிரூபண பிரமாண பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அம்மா தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதியை தான் நானும் எனது தரப்பு சங்கதிகளாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாரியம்மாள் கிரையம் செய்த தர சொல்லி தாக்கல் செய்த வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய நிரூபண பிரமாண பத்திரத்தின் படி நான் இளவராக இருக்கும் போது எனது அப்பா தான் பாதுகாவலராக போட்டு ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்பா பெயர் பழனிசாமி என்றால் சரிதான், யார் எனது பாது காவலரோ அவரை இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சொத்துக்கள் என் தந்தை வழி தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாத்தாவிற்கு பூர்வீக சொத்து இருந்தது என்பதை காட்டுவதற்கான

ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவை எனக்கு பாதுகாவலராக காட்டியுள்ள நிலையில் அவர் குடும்பத்தை பார்த்துகொள்ளவில்லை என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அப்பா உயில் படி பாதுகாவலராக இருக்கும் போது எனது அம்மாவை பாதுகாவலராக வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்ய என் அம்மாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 2000–ம் ஆண்டு பிறந்தேன். 2000–ம் ஆண்டோ, 2002–ம் ஆண்டோ என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2011–ம் ஆண்டு 1,2 பிரதிவாதிகள் ரூபாய் இரண்டு லட்சம் கடனாக பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அம்மா சொல்லி தெரியும். கடனுக்கு 36 சதவீதம் வட்டி கட்டியதாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து மாரியம்மாளுக்கு கிரய ஒப்பந்தம் போடப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அது சம்மந்தமாக கிரையம் செய்து கொடுக்க மாரியம்மாள் அசல் வழக்கு எண்.188/2011 வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ள சூழ்நிலையில் மாரியம்மாளுக்கு கிரையம் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் ஒரு தவறான உயில் ஆவணத்தை உருவாக்கி எனது அப்பாவும், அம்மாவும் நாங்கள் மைனராக இருந்த போது எங்களை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.188/2011 வழக்கில் மாரியம்மாளுக்கு பரிகாரம் கிடைக்காமல் இருக்க வேண்டி ஒரு தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், எந்த ஒரு விவரமும் நேரடியாக தெரியாமல் என் தாயார் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை நான் மேஜரான காரணத்தினால் என் பெயரில் மாற்றி தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் அசல் வழக்கு எண்.188/2011 வழக்கில் தீர்ப்பாணை ஆக வேண்டும் என்றாலும் அசல் வழக்கு எண்.213/2013 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.